**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**
**முன்னிலை: திருமதி.N.ஷர்மிளா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, சத்தியமங்கலம்**

2023-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16-ம் நாள் வியாழக்கிழமை
(2053 திருவள்ளுவராண்டு சுபகிருது வருடம் மாசித்திங்கள் 04-ம் நாள்)

I.A.No.2/2021
in
M.C.O.P.No.197/2016

1.சரஸ்வதி
2.பழனியப்பன் (இறப்பு)
3.பொங்கியம்மாள்
4.மைனர்.கவின்
5.மைனர்.பிரதீப்
(4,5, மைனர் மனுதாரரின் கார்டியன், தாயார் சரஸ்வதி)

... மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

1. செல்வம்
2.பரமாசிவம்
3.நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி
லிமிடெட் கிளை மேலாளர்

... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 20.01.2023 தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.M.அப்புசாமி அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.L.புவனேஷ்வரன் அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.சுசீந்தரன் அவர்கள் ஆஜராகியும், 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.S.ஸ்ரீதரன் அவர்கள் ஆஜராகியும், 6-ம் எதிர்மனுதாரர்/உத்தேசிக்கட்சிக்காரர் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இரு தரப்பில் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரையில் இந்த நீதிமன்ற ஆய்விலிருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

1. இந்த மனுவானது, இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் எதிரில் வந்த ஆம்னி வேன் TN-36-AX-6129 என்ற வாகனத்தின் ஓட்டுனர், உரிமையாளர் மற்றும் காப்பீடுதாரர்களை 4,5 மற்றும் 6 எதிர்மனுதாரர்களாக கட்சிசேர்த்துக்கொள்ள (Impleading) அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி, கட்டளை 1 விதி 10 பிரிவு 151 சி.பி.சி-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:-

இந்த மனுவானது, மனுதாரர் கணவர் விபத்தினை ஏற்படுத்திய இரு சக்கரவாகனமான TN-40-J-6858 என்ற வாகனத்தினை 1-ம் எதிர்மனுதாரர் ஓட்ட எனது கணவர் பின்புறம் அமர்ந்து கொண்டு செல்லும்போது எதிரே வந்த ஆம்னி வேன் TN-36-AX-6129 என்பதின் மீது மோதி மனுதாரர் கணவர் தூக்கி வீசப்பட்டு அடிப்பட்டு இறந்து விட்டார். சத்தியமங்கலம் காவல் ஆய்வாளர் அவர்கள் 1-ம் எதிர்மனுதாரர் பேரில் விபத்து ஏற்படுத்தியதாக குற்றவாளி என நிர்ணயம் செய்து அவர் மேல் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை அனுசரித்து மனுதாரரும், மற்ற மனுதாரர்களும், எதிர்மனுதாரர்கள் பேரில் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தோம். மேற்படி வழககானது மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் எதிர்மனுதாரர்களது சாட்சி விசாரணை முடிவுற்று தற்போது விவாதத்திற்காக போடப்பட்டுள்ளது. மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரர் மோதிய மாருதி ஆம்னி வேன் TN-36-AX-6129 என்ற வாகனத்தின் ஓட்டுனர், உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தினர் போன்றவர்களை இவ்வழக்கில் எதிர்மனுதாரர்களாக மனுதாரர் அறியாமையின் காரணமாக கட்சி சேர்க்காமல் விட்டுவிட்டேன். மேற்படி விவரம் மனுதாரருக்கு தற்போது தான் தெரிய வருகிறது. மேற்படி ஆம்னி வேன் TN-36-AX-6129 என்ற வாகனத்தின் ஓட்டுனர். உரிமயாளர்

மற்றும் காப்பீடுதாரர்களை இம்மனுவில் அவசிய கட்சிக்காரர்கள் ஆகும் மேற்படியார்களை இவ்வழக்கில் எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்து ஒர் உத்தரவு பிறப்பிக்கும் படியும், அல்லாவிடில் மனுதாரர்களுக்கு அளவு கடந்த நஷ்டம் ஏற்படும், மனுதாரர்கள் வேண்டுமென்றே, அஜாக்கிரதையாகவோ மேற்படியார்களை எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்க்காமல் இருக்கவில்லை மேற்படியார்களை இவ்வழக்கில் எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்ப்பதால் வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறுவதில்லை. மேற்படியார்களை எதிர்மனுதாரர்களாக சேர்த்தால் தான் இவ்வழக்கில் நிரந்தர மற்றும் முடிவான தீர்வுகான முடியும் என்று முன் வைக்கப்பட்டுள்ளது.

**3. 4<u>-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிர் மனு உரையின் சுருக்கம்</u>:-**

4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிர்மனு உரையில், மனுச் சங்கதிகளை வலுவாக மறுத்தும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை உரிய ஆவணங்களுடன் மனுதாரரே நிரூபிக்க வேண்டும். பிரமாணப்பத்திரிக்கை பாரா 2-ல் சொல்லியுள்ள சங்கதியான "எனது கணவர் விபத்தினை ஏற்படுத்திய இருசக்கர வாகனமானது TN-40-J-6858 என்ற வாகனத்தினை 1-ம் எதிர்மனுதாரர் ஓட்ட எனது கணவர் பின்புறம் அமர்ந்து கொண்டு செல்லும்போது" சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய்யானது. உண்மையில் இறந்து போன வேலுச்சாமி தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்துள்ளார். இந்த விவரம் முதல் தகவல் அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னிட்டு பொய்யாக 161 அறிக்கையில் செல்வம் வண்டியை ஓட்டியதாக இறந்து போன வேலுச்சாமியின் குடும்பத்தாரின் Influence கீழ் செல்வம் இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் துர்லாபம் அடைய வேண்டுமென்பதற்கு சேர்க்கப்பட்டுள்ளார். மனுவில் "நான் 1-ம் எதிர்மனுதாரர் மோதிய மாருதி ஆம்னி வேன்" என்று குறிப்பிட்டுள்ள சங்கதியானது என்பது புரியவில்லை, எதிரியை குறித்து

குறிப்பிடப்பட்டுள்ளதும், சந்தேகமாக உள்ளது. இந்த நிலையில் இந்த 4-ம் எதிர்மனுதாரரை சேர்க்க இயலாது. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. தற்போது இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்:**

இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா என்பதே ஆகும்?

5. இந்த மனு விசாரணையின் போது சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. தீர்வு:-**

6.1. இரு தரப்பிலும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது.

6.2. இந்த மனுவானது, மனுதாரர் கணவர் விபத்தினை ஏற்படுத்திய இரு சக்கரவாகனமாக TN-40-J-6858 என்ற வாகனத்தினை 1-ம் எதிர்மனுதாரர் ஓட்ட எனது கணவர் பின்புறம் அமர்ந்து கொண்டு செல்லும்போது எதிரே வந்த ஆம்னி வேன் TN-36-AX-6129 என்பதின் மீது மோதி மனுதாரர் கணவர் தூக்கி வீசப்பட்டு அடிப்பட்டு இறந்து விட்டார் என்றும், சத்தியமங்கலம் காவல் ஆய்வாளர் அவர்கள் 1-ம் எதிர்மனுதாரர் பேரில் விபத்து ஏற்படுத்தியதாக குற்றவாளி என நிர்ணயம் செய்து அவர் மேல் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனை அனுசரித்து மனுதாரரும், மற்ற மனுதாரர்களும், எதிர்மனுதாரர்கள் பேரில் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்றும், மேற்படி வழககானது மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் எதிர்மனுதாரர்களது சாட்சி விசாரணை முடிவுற்று தற்போது விவாதத்திற்காக போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரர் மோதிய மாருதி ஆம்னி வேன் TN-36-AX-6129 என்ற வாகனத்தின் ஓட்டுனர், உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தினர் போன்றவர்களை இவ்வழக்கில் எதிர்மனுதாரர்களாக மனுதாரர்

அறியாமையின் காரணமாக கட்சி சேர்க்காமல் விட்டுவிட்டேன் என்றும், மேற்படி விவரம் மனுதாரருக்கு தற்போது தான் தெரிய வருகிறது என்றும், மேற்படி ஆம்னி வேன் TN-36-AX-6129 என்ற வாகனத்தின் ஓட்டுனர் என்றும், உரிமயாளர் மற்றும் காப்பீடுதாரர்களை இம்மனுவில் அவசிய கட்சிக்காரர்கள் ஆகும் மேற்படியார்களை இவ்வழக்கில் எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்து ஒர் உத்தரவு பிறப்பிக்கும் படியும், அல்லாவிடில் மனுதாரர்களுக்கு அளவு கடந்த நஷ்டம் ஏற்படும், மனுதாரர்கள் வேண்டுமென்றே, அஜாக்கிரதையாகவோ மேற்படியார்களை எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்க்காமல் இருக்கவில்லை மேற்படியார்களை இவ்வழக்கில் எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்ப்பதால் வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறுவதில்லை என்றும், மேற்படியார்களை எதிர்மனுதாரர்களாக சேர்த்தால் தான் இவ்வழக்கில் நிரந்தர மற்றும் முடிவான தீர்வுகான முடியும் என்று முன் வைக்கப்பட்டுள்ளது.

**6.3.** எதிர்மனுதாரர் எதிர்வுரையில், இறந்து போன வேலுச்சாமி தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்துள்ளார் என்றும், இந்த விவரம் முதல் தகவல் அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பின்னிட்டு பொய்யாக 161 அறிக்கையில் செல்வம் வண்டியை ஓட்டியதாக இறந்து போன வேலுச்சாமியின் குடும்பத்தாரின் Influence கீழ் செல்வம் இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் துர்லாபம் அடைய வேண்டுமென்பதற்கு சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், மனுவில் "நான் 1-ம் எதிர்மனுதாரர் மோதிய மாருதி ஆம்னி வேன்" என்று குறிப்பிட்டுள்ள சங்கதியானது என்பது புரியவில்லை, எதிரியை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதும், சந்தேகமாக உள்ளது. இந்த நிலையில் இந்த 4-ம் எதிர்மனுதாரரை சேர்க்க இயலாது என்றும், எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**6.4.** மனு மற்றும் எதிருரை சங்கதிகளை பரிசீலிக்கும்போதும், இந்த அசல் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு விபத்து குற்ற அறிக்கையினை பரிசிலிக்கும்போதும், இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் உத்தேசக்கட்சிக்காரர் ஓட்டிச் சென்ற வாகனம் விபத்திற்கு உள்ளதாதினால் இந்த மனுதாரர் குறிப்பிட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாகவே உள்ளன. மேலும் இழப்பீடு எந்த நிறுவனம் செலுத்த வேண்டும், எந்த வண்டியின் மீது தவறு உள்ளது அல்லது இருவண்டியின் மீதும் தவறு உள்ளதா என்பது இருதரப்பு விசாரணைக்கு பிறகு அசல் வழக்கின் தீர்வில் தான் முடிவு செய்ய இயலும் என்பதாலும், இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவிதமான கஷ்டநஷ்டமும் ஏற்படப் போவதில்லை என்பதாலும், மேலும் இந்த மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு அசல் மனுவில் உரிய இழப்பீடு கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாலும், இந்த மனுவை அனுமதிக்கலாமென்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7.முடிவாக, மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுதொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்த்து பிழைத்திருத்தங்கள் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு</u>
<u>சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்:-</u> -இல்லை-

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.